[21st November 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு விடையளிக்க என்னிடம் தகவல் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : சார், தகுதியிருந்தும் கணவன் மனைவி இருவர் இருந்தால், கணவனுக்கு கொடுத்தால் மனைவிக்கு இல்லை, மனைவிக்கு கொடுத்தால் கணவனுக்கு இல்லை என விதி மாற்றியமைக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு அமைத்த விதிகள் அப்படியே இருக்கின்றன. அந்த விதிகளின்படி யார் யாருக்குக் கொடுக்க முடியுமோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : முதியோர்கள் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துக்கொண்டு அதன் மூலம் வசதிகளைக் கேட்டால் அதை அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பென்ஷனர்கள் சங்கம் இருக்கிறது. அவர்களுக்குப் புதிதாக யாராவது தலைவர் முன் வந்து சங்கம் அமைத்து அதனால் தங்களுக்கும் அனுகூலமா என்று அவர்களே கவனிக்க வேண்டும். (சிரிப்பு)

திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : சில முதியோர்களுக்கு முதலிலேயே பரிசிலனை செய்யப்பட்டு உதவி கொடுக்கப்பட்டிருந்தும், பிற்பாடு மறுபரிசிலனை செய்து கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதல் பரிசிலனையில் சில தகவல் தெரியாமல் போயிருக்கலாம். அதற்காகத்தான் புனர்ப் பரிசீலனை செய்கிறார்கள்.

மணியார்டர் மூலமாக பென்ஷன்

*** 381 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குறைந்த அளவு பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு பென்ஷன் வாங்க போக்குவரவு செலவும் சங்கடமும் அதிகம் ஏற்படுவதால் 50 ரூபாய்க்குக் குறைந்த பென்ஷன் தொகை வாங்குகிறவர்களுக்கு மணியார்டர் மூலம் தொகை அனுப்ப உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்படாத பென்ஷன் தொகையை மணியார்டர் மூலம் அனுப்புவதற்குத் தற்போதைய விதிகளில் ஏற்கனவே அனுமதியிருக்கிறது. ஆனால், பென்ஷனர் பென்ஷன் தொகையைத் தமது செலவில் மணியார்டர் மூலம் அனுப்பும்படி எழுதிக்கொடுக்க வேண்டும்.

பென்ஷன்

*** 382 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதியோர் பெறும் உதவித் தொகை ரூ. 20-ஐவிட, அரசாங்கத்தில் 30 வருடம் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களின் பென்ஷன் தொகை குறைவாக கிடைப்பதால் ரூ. 20-க்கு குறைத்து

21st November 1963]

வாங்குபவர்களின் பென்ஷன் தொகையை சராசரி ரூ. 20 ஆக உயர்த்த அரசாங்கம் உடனடியாக முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter is under the consideration of the Government.

திரு. ஆ. தங்கவேலு : சார், எவ்வளவு சீக்கிரத்தில் முடிவு ஆகும் என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எப்பொழுது முடிவு ஆகும் என்று குறிப்பாகக் கூறுவதற்கு இப்பொழுது சாத்தியம் இல்லே. அது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது. ரூபாய் 20-க்குக் குறைந்த பென்ஷன் வாங்குபவர்கள், முதியோர், பென்ஷனுக்கு என்ன என்ன நிபந்தனைக்கு உட்படுகிறுர்களோ, அவைகளுக்கு உட்பட்டால் அதே அளவு கொடுப்பதா என்பது யோசனையில் இருக்கிறது.

Temporary State-wide permits for lorries

* 383 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the mode of issue of temporary State-wide permits to lorries is not uniform in all the districts. and

(*b*) if so, the reasons for the disparity?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சேலம் ஜில்லாவில் இந்த மாதிரி வித்தியாசம் காட்டப்படுவதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முன்பு இருந்த வித்தியா சங்களே நீக்கி இப்பொழுது உத்தரவு போட்டாகிவிட்டது. இப்பொழுது ஒன்றும் தடையில்லே.

மறைந்த அண்ணுமலேப் பிள்ளேக்கு நினைவுச் சின்னம்

* 384 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மறைந்துபோன மாவீரர், உயர்திரு. அண்ணுமலேப் பிள்ளே அவர்களுக்கு சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லே.

புலவர் கா. கோவிந்தன் : சார், இந்த மன்றத்திலே முன்பு பேச்சு எழுந்தபோது முன்னுள் முதலமைச்சர் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப் போவதாகச் சொன்னுர்கள். இப்பொழுது 'இல்லே' என்று சொல்லக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : முன்னுள் முதலமைச்சர் அப்படிச் சொன்னதாக எனக்கு நினைவு இல்லே. திருவண்ணுமலேயிலே அண்ணுமலேப் பிள்ளேக்கு ஞாபக சின்னம் வைக்க கனம் அங்கத்தினர் போன்றவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டால் பொது மக்களுடைய ஆதரவு நிறைய இருக்கும் என்று நினேக்கிறேன்.